செ.வெ.எண்:-02/2019 நாள்:-01.03.2019

**திண்டுக்கல் மாவட்டம்**

**வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் வாக்காளர்கள் ஒருவர் கூட விடுபடாமல் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக விழிப்புணர்வு பணிகளுக்கு இந்திய தேர்தல் ஆணையம் முக்கித்துவம் அளித்து வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

திண்டுக்கல் எம்.வி.எம் அரசினர் மகளிர் கலைக்கல்லூாயில் இன்று (01.03.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 18 வயது பூர்த்தி அடைந்துள்ள வாக்காளர்கள் அனைவரும், ஒருவர் கூட விடுபடாமல் வாக்களிக்க வேண்டும். இந்திய தேர்தல் ஆணையம் வாக்களார்கள் வாக்களிப்பது அவசியம் குறித்த விழிப்புணர்வு பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

மேலும், தேர்தல் குறித்த எவ்வித சந்தேகங்களுமின்றி வாக்களர்கள் வாக்களிக்க வர வேண்டும் என்ற அடிப்படையிலும், குறிப்பாக முதன்முறையாக வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்ற நோக்கிலும் EVM செயல்பாடுகள் குறித்த விளக்கமளிக்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டு செயல்விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் தேர்தல் காலங்களில் ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் நவீன காலத்திற்கேற்ப இந்திய தேர்தல் ஆணையம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. கடந்த காலங்களில் வாக்களார்களுக்கு வாக்கு சீட்டு வழங்கப்பட்டு அதன்மூலம் வாக்குபதிவு நடைபெற்றது. பின்னர் மின்னணு வாக்குபதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டு அதன்மூலம் வாக்குபதிவு நடைபெற்றது. தற்சமயம், மின்னணு வாக்குபதிவின் மூலம் வாக்காளர்களுக்கு வாக்களிப்பதில் ஏற்படும் சந்தேகங்களை கழைவதற்கு, தேர்தல் ஆணையத்தின் மூலம் VVPAT இயந்திரம் பயன்படுத்தப்பட்டு, அதன்மூலம் வாக்காளர்களுக்கு யாருக்கு வாக்களித்தோம் என்பதை உறுதி செய்யும் வகையில் இந்த இயந்திரம் அனைத்து வாக்கு சாவடிகளிலும் பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, நமது மாவட்டத்தில் அனைத்து தொகுதிகளிலும் உள்ள வாக்கு சாவடி மையங்களில் VVPAT இயந்திரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேலும், வாக்காளர்கள் தேர்தல் குறித்த புகார்களுக்கும் மற்றும் சந்தேகங்களுக்கும் E-Vigilance செயலியை பயன்படுத்தி அதன் மூலம் விபரங்கள் அறிந்து கொள்ளலாம். வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் இடம் பெறுவதற்கு நாம் வீட்டிலிருந்தபடியே ஆன்லைன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம். மேலும்,மாணவ, மாணவியர்கள் தேர்தல் தொடர்பான சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்கு ஏதுவாக அந்தந்த கல்வி நிறுவனங்களில் Campus Ambassador நியமிக்கப்பட்டு சந்தேகங்கள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இளைஞர்கள் நமது அடிப்படை கடமைகளில் ஒன்றான, வாக்களித்தலை ஒவ்வொருவரும் கருத்தில் கொண்டு வாக்களிக்கும் வகையில், கல்லூரிகளில் இதுபோன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

ஜனநாயக கடமையாற்ற நாம் அனைவரும் வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெற்றிருப்பதை உறுதி செய்து கொள்ள 1950 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் அறிந்து கொள்ளலாம். எனவே, வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் ஒவ்வொரு குடிமகனும் தவறாமல் வாக்களித்து, நமது வாக்குரிமையை நிலைநாட்ட வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ, மாணவிகளிடம் தேர்தல் தொடர்பாகவும் மற்றும் மாவட்டத்தின் தொகுதிகள், மின்னணு வாக்குபதிவு இயந்திரம் மற்றும் VVPAT இயந்திரம் செயல்பாடுகள் ஆகியவைகள் குறித்து பல்வேறு கேள்விகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாணவியர்களிடம் கேட்டார். அதற்கு சரியாக பதிலளித்த மாணவ மாணவிகளை பாராட்டி இனிப்புகளை (சாக்லேட்) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில், வட்டாட்சியர் (திண்டுக்கல் மேற்கு) திருமதி.லெட்சுமி, எம்.வி.எம் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் திருமதி.லதா மற்றும் அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்**

---